# இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களின் திரும்பி வருகை மற்றும் மீள இணைவு மீதான உப கொள்கையும் தேசிய செயற்திட்டமும்



வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

# இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களின் திரும்பி வருகை மற்றும் மீள இணைவு மீதான உப கொள்கையும் தேசிய செயற்திட்டமும்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களின் மீளத் திரும்பிவருதல் மற்றும் மீள இணைதல் மீதான உபகொள்கை மற்றும் தேசிய செயற்திட்டத்தை விருத்தி செய்தல்

ஆதரவளிப்பவர்

சர்வதேச
தொழிலாளர்
ஸ்தாபனம்

நவம்பர் 2015

## நன்றியறிதல்

இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களின் திரும்பிவருதல் மற்றும் மீள இணைதல் மீதான உபகொள்கையை விருத்தி செய்தலும் மற்றும் அது தொடர்பான செயற்திட்டத்தை விருத்தி செய்தலுமானது, வெளிநாட்டு வேலைவாய்ப்பை பல பெண்களும் ஆண்களும் நாடிச்சென்று,அதன் வருடாந்த அதிகரிப்பு எண்ணிக்கையானது 2014 இல் 300,000 க்கு அப்பால் செல்லும் அளவிலான விசேடமான நிலையில், நாட்டிலே ஒரு நீண்டகாலமாக இத்தேவை உணரப்பட்ட விடயமாக இருந்து வருகிறது.

புலம்பெயர் தொழிலாளர்களின் திரும்பிவருதல் மற்றும் மீள இணைவு மீதான உபகொள்கை மற்றும் தேசிய செயற்திட்டத்தின் உருவாக்கமானது வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பணியாளர்களின் அயராத முயற்சியின் இறுதி விளைவாகும். இதற்கு மேலதிகமாக 2012 ஆம் ஆண்டிலிருந்து துறைசார் அமைச்சுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பரந்துபட்ட பங்காண்மையாளர்களும் முகவர்களும் இந்தச் செயன்முறையில் பங்களிப்பு செய்திருந்தனர். அவர்களது முயற்சிகளுக்கும் உள்ளீடுகளுக்கும் நான் நன்றி செலுத்துவதுடன் தேசிய செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அவர்களது தொடர்ச்சியான ஈடுபாட்டிற்காகவும் அழைப்பு விடுக்கின்றேன்.

நல்லாட்சி பாதுகாப்பும் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வலுவூட்டுதல் என்பவற்றின் ஊடாக கண்ணியமான வேலையை ஊக்குவித்தல் மீதான சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் கருத்திட்டத்தால் உபகொள்கை மற்றும் தேசியசெயற்திட்டம் என்பவற்றை உருவாக்குவதில் தொழில்நுட்ப ஆதரவு வழங்கியமையை நான் நன்றியுடன் ஏற்றுக்கொள்கிறேன். மேலும் இலங்கையில் அபிவிருத்திக்கும் கூட்டுஒத்துழைப்புக்குமான சுவிஸ் முகவராலயத்தால் வழங்கப்பட்ட இலங்கை தேசிய புலம்பெயர்வு கொள்கையின் வினைத்திறனான அமுல்படுத்தலை உறுதிப்படுத்தியமையையும் இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களின் திரும்பிவருதல் மீள இணைதல் மீதான இந்த உபகொள்கை மற்றும் தேசிய திட்டத்தினை விருத்தி செய்வதில் வழிகாட்டியையும் உதவியையும் வழங்கியதற்கான இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ILOவின் நாட்டிற்கான அலுவலகத்தின் பணிப்பாளர் திரு.டொங்லின் (Donglin) அவர்களுக்கும் எனது விசேட நன்றியை பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன்.

ILO கொழும்பு அலுவலகத்தின் தொழிலாளர் புலம்பெயர்வு தேசிய கருத்திட்டத்தின் இணைப்பாளர் சுவய்றி ரூபசிங்க அவர்களுக்கும் அவர் இந்த உபகொள்கையை உருவாக்கும் செயன்முறையை முகாமைத்துவம் செய்வதில் காட்டிய அவரது பங்களிப்பு, அர்ப்பணிப்பிற்காகவும் மற்றும் உபகொள்கையையும் தேசிய செயற்திட்டத்தையும் விருத்தி செய்வதில் பெறுமதியான வகிபங்கை ஆற்றிய கிறியேட்டர்ஸ் போரத்தினைச் (Creators Forum) சேர்ந்த Ms சிறியானி பெரேரா மற்றும் திரு. M.T லக்மன் ஆகியோருக்கும் நான் நன்றி செலுத்த விரும்புகின்றேன்.

அத்துடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கௌரவ அமைச்சரின் ஆலோசகர் திருமதி. பத்மினி ரத்நாயக்க அவர்களுக்கும் அவர் இவ் உபகொள்கையின் ஆரம்ப கட்டத்திலிருந்து வழங்கிய ஈடுபாட்டிற்கும், வழிகாட்டுதலுக்கும் அத்துடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தை சேர்ந்த எல்லா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் இவ் உபகொள்கையை மற்றும் தேசிய செயல் திட்டம் முதலியவற்றை இறுதிப்படுத்துவதிலும், வெளியிடுவதிலும் அவர்கள் ஆற்றிய எல்லா பங்களிப்புக்கள் முயற்சிகளுக்காகவும் அவர்களுக்கு நன்றி செலுத்த விரும்புகிறேன்.

G.S. விதானகே
செயலாளர்
வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு
இலங்கை
நவம்பர் 2015

## சுருக்க எழுத்துச் சொற்கள்

| | | |
|---|---|---|
| ALFEA | - | அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களின் சங்கம் |
| ASEAN | - | தென்கிழக்காசிய நாடுகள் |
| CoOs | - | பூர்வீக நாடுகள் |
| COD | - | சென்றடையும் நாடுகள் |
| CSO | - | சிவில் சமூக நிறுவனங்கள் |
| EPS | - | வேலைவாய்ப்பு அனுமதிப்பத்திர முறைமை |
| GCC | - | வளைகுடா ஒத்துழைப்புச்சபை |
| GAD | - | பால்நிலையும் அபிவிருத்தியும் |
| GDP | - | மொத்த உள்நாட்டு உற்பத்தி |
| IDB | - | கைத்தொழில் அபிவிருத்திச் சபை |
| ILO | - | சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் |
| IOM | - | புலம்பெயர்வு மீதான சர்வதேச நிறுவனம் |
| MoU | - | புரிந்துணர்வு ஒப்பந்தம் |
| NGO | - | அரச சார்பற்ற நிறுவனம் |
| SAARC | - | தெற்காசிய நாடுகளின் பிராந்திய கூட்டமைப்பு |
| SLBFE | - | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் |
| SIYB | - | உங்களுடைய வியாபாரத்தினை ஆரம்பித்தல் மற்றும் முன்னேற்றுதல் |
| TVEC | - | மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழு |
| TVET | - | மூன்றாம் நிலை தொழிற்கல்வி மற்றும் பயிற்சி |

# புலம்பெயர் தொழிலாளர்கள் திரும்பிவருதல் மற்றும் மீள இணைதல் மீதான உபகொள்கை மற்றும் தேசிய செயற்திட்டம்

## பின்புலம்

வேலைவாய்ப்பிற்காக புலம்பெயர்வதிலிருந்து நன்மையடையும் உலகிலுள்ள பல நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். வெளிநாட்டு வேலைவாய்ப்பிலிருந்தான பண அனுப்புகையானது மொத்த தேசிய உற்பத்தியில் அநேகமாக 10 வீதத்திற்கு பங்களிப்புச் செய்கின்றன. இது நாட்டின் மிக உயர்ந்த பாரம்பரியமற்ற வெளிநாட்டு நாணய வருமானமாக உள்ளது. 2013 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பிற்கான புலம்பெயர்வு ஊடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பண அனுப்புகைகள் ரூபா 827,689 மில்லியனாகும். இது நாட்டின் மொத்த வெளிநாட்டு நாணய பரிமாற்ற ஈட்டத்தின் 65 வீதமாகும் (மத்திய வங்கி வருடாந்த அறிக்கை 2013).

இலங்கைப் பொருளாதாரத்தின் புலம்பெயர் தொழிலாளர்களின் பங்களிப்பை ஏற்றுக்கொண்டு அரசாங்கமானது புறப்படுவதற்கு முன்பு, சேவையின்பொழுது, திரும்பிவருதலின்பொழுது, மீள இணைதல் கட்டங்களினை உள்ளடக்கிய புலம்பெயர்வு வட்டத்தினை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்வதற்கான பொறிமுறைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் உருவாக்கியுள்ளது. இலங்கையில் புலம்பெயர் முகாமைத்துவத்தில் ஆரம்ப நிறுவன பதிற்செயற்பாடானது தொழில் அமைச்சு ஊடாகவும் அதனைத் தொடர்ந்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஊடாகவும் (SLBFE) 1985 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இலங்கை வெளிநாட்டு பணியகத்தின் நிறுவுகையானது இலங்கையில் புலம்பெயர் வேலைவாய்ப்பின் முன்னேற்றத்திற்கான முக்கிய அரச பதிற்செயற்பாடாக இருந்ததுடன் அப்பொழுதிலிருந்து முறைமை ரீதியான அணுகுமுறை கைக்கொள்ளப்பட்டது. 2007 இல் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்பல் என் ஒரு தனியான அமைச்சு உருவாக்கப்பட்டதுடன், அது தொழிலுக்கான புலம்பெயர்வு மீதான நீண்டகால நோக்கை வெளிப்படுத்தியிருந்தது.

அமைச்சின் நீண்டகால திட்டங்களின் ஒரு முக்கிய கட்டமாக இருப்பது ILO வின் தொழில்நுட்ப ஆதரவு மற்றும் கூட்டுழைப்புடன் 2008 இல் தேசிய தொழில் புலம்பெயர்வு கொள்கையின் உருவாக்கமாகும். தேசிய தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள்கையானது (NLMP) மூன்று பிரதான உட்கூறுகளைக் கொண்டுள்ளது. புலம்பெயர்வு செயன்முறையின் ஆளுகை, புலம்பெயர் தொழிலாளர் மற்றும் அவர்களின் குடும்பங்களின் பாதுகாப்பும் வலுவூட்டுகையும், புலம்பெயர்வையும் அபிவிருத்தி செயன்முறையையும் இணைப்பதும் ஆகும். தேசிய புலம்பெயர்வுக் கொள்கையானது இலங்கையில் புலம்பெயர்வின் முழுமையானதும் அனைத்துமடங்கியதுமான முகாமைத்துவத்திற்கு வழிகாட்டுதலை வழங்குவதுடன் திரும்பிவரும் புலம்பெயர்வோரின் மீள ஒன்றிணையும் விடயங்களிலும் எல்லா செயன்முறைகளிலும் உட்படுத்துவதற்கு அனைத்துமடங்கிய திரும்பிவருதல் மீள இணைதல் திட்டத்தின் தேவைக்கு அழுத்தம் கொடுக்கிறது.

# சர்வதேச சமவாயங்கள் மற்றும் கொள்கை பணிச்சட்டகம்

பல சர்வதேசக் கருவிகள் வேலைவாய்ப்பிற்கான புலம்பெயர்விற்கு வழிகாட்டுகின்றன. பிரதான கருவிகளில் உள்ளடங்குவனவான 1949 ஆம் ஆண்டு C97 வேலைவாய்ப்பிற்கான புலம் பெயர்விற்கு சம்பந்தப்பட்ட ILO சமவாயமாகும். இது குடிவரவு குடியகல்வு தொடர்பான ஒழுங்குவிதிகளையும் சட்டங்களையும் கொள்கைகளையும் எடுத்துரைக்கிறது. துஷ்பிரயோகமான நிலைமைகளில் புலம்பெயர்வு தொடர்பான சமவாயம் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு நடாத்துகையில் சமத்துவத்தை ஊக்குவிப்பது மீதான சமவாயம், 1975 ஆம் ஆண்டு C143 சமவாயமானது சட்டத்திற்கு மாறான வேலைவாய்ப்பு, புலம்பெயர்வோரின் திருட்டுத்தனமான நகர்வுகள், சட்டரீதியற்ற வேலைவாய்ப்புக்களைத் தடுப்பதற்கான தகவல்களைப் பரிமாறுதல், போன்றவற்றின் சட்டரீதியான அம்சங்களைப் பலப்படுத்துகிறது.

பெண்களுக்கு எதிரான எல்லா வடிவங்களிலுமான பாரபட்சங்களை இல்லாதொழிப்பது மீதான சமவாயம் (CEDAW) 1981 ஆனது புலம்பெயர் பெண் தொழிலாளர்களால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளை விபரிக்கும் உறுப்புரைகளைக் கொண்டுள்ளது CEDAW குழுவின் பொது சிபார்சுகள் இல 26 ஆனது புலம்பெயர் தொழில் தொடர்பானவைகளை எவ்வாறு தீர்த்து வைப்பது என வழிகாட்டுதல்களை வழங்குகிறது. எல்லா புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களைப் பாதுகாப்பது மீதான சமவாயம் 1990: புலம்பெயர்வோர் மற்றும் அவர்களது குடும்பங்களின் முழு அளவு செயன்முறையின்பொழுது பிரயோகிக்கப்படும் UN தீர்மானம் 45/158 ஆனது தயார்ப்படுத்தல், புறப்படுதல், இடைநிலை நிலைமாற்றம், வேலைவாய்ப்பின் நிலையில் பதிலுபகார செயற்பாடுகளின் காலப்பகுதி திரும்பிவருதல் என்பவற்றை உள்ளடக்குகிறது. சமவாயம் ஆனது எல்லாப் புலம்பெயர் பணியாளர்களினதும் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் தொடர்பாக 71 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக தனியார் வேலைவாய்ப்பு முகவர்களின் சமவாயம் 1997 (ILO சமவாயம் இல 181) ஆனது குறிப்பாக புலம்பெயர் தொழிலாளர்கள் தொடர்புடைய விடேசமாக தனியார் முகவர்கள் இப்பொழுது தொழிலாளர்களை வசதிப்படுத்துவதில் பெரிதும் ஈடுபட்டு இருப்பதினால் குறிப்பாக புலம்பெயர் தொழிலாளர்களுக்கு மிகவும் பொருத்தமானதாக உள்ளது. இச்சமவாயமானது உரிமம் அளித்தல் அல்லது சான்றுப்படுத்தலின் அரசு தரப்பு அமுல்படுத்தும் ஒரு முறையை வழங்குகிறது. அதன் தொழிலாளர்களின் உரிமைகளாகிய ஒன்று கூடும் உரிமை, கூட்டுப்பேரம்பேசல், தொழிலாளர்களுக்கு எதிரான பாரபட்சம் மறைமுகமாக நேரடியாக தொழிலாளர்களிடமிருந்து கட்டணங்களை அறவிடுதல், என்பவற்றில் தொழிலாளர்களின் உரிமைகள் மறுக்கப்படுவதைத் தடுக்கிறது. வேலையில் அடிப்படைக் கொள்கைகள் உரிமைகள் மீதான ILO பிரகடனம் ஆனது மற்றும் அதனைத் தொடர்ந்து வந்தவைகள் (1988) விசேடமாக அதனது முன்னுரையில் புலம்பெயர் தொழிலாளர்களைப் பாதுகாப்பதை எடுத்துக்காட்டுகிறது. அத்துடன் வீட்டு தொழில் சூழமைவில் விசேடமாக பொருத்தமானதாகவும் உள்ளது.

புலம்பெயர்வோரின் மனித உரிமைகள் மீதான ஐநாவின் விசேட அறிக்கையாளர் ஒருவர் மனித உரிமைகள் மீதான ஆணைக்குழுவின் ஆணையினால் 1999 இல் நியமிக்கப்பட்டார். ஆட்களை விசேடமாக பெண்கள் மற்றும் சிறுவர்களை வஞ்சக்கடத்தல் செய்வதை தடுத்தல், அழுத்துதல் மற்றும் தண்டித்தலுக்கான ஐநா மரபொழுங்கு ஆனது எல்லைகடந்த ஒழுங்கு செய்யப்பட்ட குற்றச்செயல்களுக்கு எதிரான ஐநா சமவாயம் 2000, தொழிலாளர் புலம்பெயர்வுக்கான பலதரப்புக் கூட்டுழைப்பு மீதான ILO சமவாயம் 2005 மற்றும் தொழில் புலம்பெயர்வு மீதான ILO பலதரப்பு பணிச்சட்டகம் 2006 என்பன அபிவிருத்திக்கான புலம்பெயர்வின் பங்களிப்புக்களை உச்சப்படுத்துவதற்காக புலம்பெயர் தொழிலாளர்களின் திரும்பிவருதல் மற்றும் மீள இணைதல் மீதான கொள்கைகளின் தேவைப்பாட்டினை அங்கீகரித்துள்ளதுடன், திரும்பிவரும் புலம்பெயர்வோருக்கு பயிற்சி அளித்தல் தொழில்நுட்ப மாற்றத்தை ஊக்குவித்தல், புலம்பெயர் தொழிலாளர்களின் மூலதன மற்றும் நிலைமாற்ற வியாபார செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்திக்கான புலம்பெயர்வின் பங்களிப்புக்களை உச்சப்படுத்துவதற்கு புலம்பெயர் தொழிலாளர்களின் திரும்பிவருதல் மற்றும் மீள இணைதல் மீதான கொள்கைகளின் அவசியத்தை அங்கீகரித்துள்ளது.

பிராந்திய ரீதியில் 2003 இல் உருவாக்கப்பட்ட கொழும்பு செயன்முறையானது தொழில் புலம்பெயர்வை உருவாக்கும் 11 நாடுகளின் ஒரு கூட்டாகிய ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், சீனா, இந்தியா, இந்தோனேசியா, நேபாளம், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், இலங்கை, தாய்லாந்து, வியட்னாம், அபுதாபி ஆகியன பஹ்ரேன், குவைற், ஓமான், கட்டார், சவுதி அரேபியா,UAE, யெமன் போன்ற 7 தொழிலுக்குச் செல்லும் நாடுகளுடன் 2008 இல் உரையாடல்களை ஆரம்பித்து ஒரு கட்டுப்படுத்தாத ஆலோசனை செயன்முறையானது தொழில்புலம்பெயர்வின் பல்வேறு அம்சங்களில் கவனம் செலுத்தியதுடன் புலம்பெயர் திரும்பிவருபவர்களின் வினைத்திறனான மீளிணைதலுக்கான திட்டங்களை விருத்தி செய்வதற்கு நாடுகளைத் தூண்டியது. புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்து ஊக்குவிப்பது மீதான ஏசியன் பிரகடனமானது புலம்பெயர் திரும்பிவருபவர்கள் தமது பூர்வீக நாடுகளுக்குச் செல்லும் பொழுது வினைத்திறனான மீளிணைவுக்கான முனைப்புக்களை அமைத்துக்கொள்வதற்காக 2007 இல் அழைப்பு விடுத்தது. 2014இல் SAARCகூட தமது நாடுகளில் இருந்து புலம்பெயர் தொழிலாளர் பாதுகாப்புக்களுக்கான கலந்துரையாடல்களை முனைப்பாக்கியது.

## திரும்பி வருகை மற்றும் மீள இணைவு மீதான தேசிய கொள்கை விதிகள்

இலங்கையின் 2008 ஆம் ஆண்டு தேசிய புலம்பெயர்வுக் கொள்கையானது திரும்பிவருதல், மீள இணைதல் கொள்கைப் பணிச்சட்டகம் மற்றும் தேசிய செயற்திட்டம் என்பவற்றுக்குத் தேவையான வழிகாட்டுதல் கொள்கைகளை வழங்குகிறது. புலம்பெயர்வுக் கொள்கையில் புலம்பெயர்வு மற்றும் அபிவிருத்தியை இணைக்கும் முக்கியமான கொள்கையானது அத்திபாரமாக இருப்பதுடன் அதன் மீதே திரும்பிவருதல், மற்றும் மீள இணைத்தல் தொடர்பான தேசிய செயற்திட்டம் கட்டியெழுப்பப்படுகிறது.

அரசானது புலம்பெயர் தொழிலாளர்களால் செய்துகொள்ளப்பட்ட உரிய பங்களிப்புக்களை உரிய விதத்தில் அங்கீகரிப்பதுடன் திறன் மாற்றுகை உற்பத்தி வேலைவாய்ப்பு மற்றும் முரண்பாடு இல்லாத சமூக மீளிணைவு என்பவற்றுக்கான சந்தர்ப்பங்களுடன் திரும்பிவருதல் மற்றும் அவர்களின் மீள இணைவுக்காக அவர்களை வசதிப்படுத்துவதுடன் புலம்பெயர் தொழிலாளர்களால் செய்யப்பட்ட உரிய பங்களிப்பை உரிய விதத்தில் அங்கீகரிக்கும். அரசானது புலம்பெயர் தொழிலாளர்களுக்காக ஒரு அனைத்துமடங்கிய திரும்பிவருதல் மற்றும் மீள் இணைதல் திட்டத்தை விருத்தி செய்து அமுல்படுத்தும் எனவும் கொள்கையானது மேலும் குறிப்பிட்டுள்ளது.

இந்த கொள்கை வழிநடத்துகையைப் பின் தொடர்ந்து முக்கியமான கவனக் குவிப்பு அமைச்சு என்ற வகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் தலைமைத்துவத்தின் கீழ் உபகொள்கை மற்றும் தேசிய செயற்திட்டம் விருத்தி செய்யப்படுகிறது. புலம்பெயர் தொழிலாளர்களின் திரும்பிவருதல் மற்றும் மீள இணைதலுக்கு பிரதான பொறுப்பள்ள நிறுவனமாக இலங்கை வெளிநாட்டு பணியகம் உள்ளது. தேசிய புலம்பெயர்வுக்கொள்கையானது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் திரும்பிவரும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான ஒரு பொறிமுறையை வடிவமைத்துள்ளது என குறிப்பிட்டுள்ளது. புறப்படும் நேரத்தில் சேவை வழங்குதல், சென்றுள்ள நாடுகளில் இலங்கைத் தூதரக பணியகங்களின் உத்தேச புலம்பெயர் வள நிலையங்களின் ஊடாக சேவையின்பொழுது உதவி வழங்குதல், திரும்பிவரும்பொழுது மாவட்ட மட்டங்களில் ஒரே இடங்களில் சேவை நிலையங்களில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல் என்பன இச்சேவை வழங்கலில் உள்ளடங்குகின்றன. தேசிய கொள்கையானது புலம்பெயர் திரும்பிவருபவர்களுக்கு உள்ளூர் வேலைவாய்ப்பை ஊக்குவிக்கும் தந்திரோபாயத் தேவையை உயர்த்திக் காட்டியுள்ளதுடன் தேசிய மற்றும் தனிப்பட்ட அபிவிருத்திக்காக அவர்களின் திறன் தழுவியும் இயலுமைகளை தட்டிப்பார்ப்பதையும் உயர்த்திக் காட்டியுள்ளது. மேலும் இது தற்போதுள்ள சேமிப்புக்கள் மற்றும் முதலீட்டு திட்டங்கள், கடன் மற்றும் வியாபார விருத்திகள் என்பவற்றை மீளாய்வு செய்வதற்கும் புலம்பெயர் திரும்பிவருவோரின் பொருளாதார வலுவூட்டுகை, தொழில்முயற்சி உருவாக்கத்திற்காக ஊக்குவிப்புக்களையும் வழங்குகிறது.

தேசிய தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள்கையைத் தவிர இலங்கையில் கண்ணியமான வேலைக்கான தேசியக்கொள்கை 2006; தேசிய புலம்பெயர்வுச் சுகாதார கொள்கை 2012; தேசிய மனித வள அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்புக்கொள்கை 2012; தொழில்நுட்ப மற்றும் இலங்கையில் தாக்கப்படக்கூடிய மக்களுக்கான தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி ஏற்பாடுகள் மீதான தேசிய தந்திரோபாயம் 2010; இலங்கையில் வேலை உலகத்தில் எச்ஐவி மற்றும் எயிட்ஸ் மீதான தேசிய கொள்கை 2010 ஆகியன புலம்பெயர் தொழிலாளர்களின் திரும்பிவருதல் மற்றும் மீள இணைதல் உபகொள்கையுடன் நேரடி இணைப்பைக் கொண்டுள்ள முக்கிய கொள்கைகளாகும்.

# உபகொள்கை மற்றும் தேசிய செயற்திட்டத்தின் விருத்திக்கு இட்டுச்சென்ற செயன்முறை

இந்த உபகொள்கை மற்றும் தேசிய செயற்திட்டத்தின் விருத்தியை நோக்கி பின்வரும் தந்திரோபாய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன:

1. புலம்பெயர் திரும்பிவருவோரின் மீள இணைவுக்கான சமூக பொருளாதார மற்றும் உளவியல் ஆதரவை வழங்குவதற்காக (குறைந்த திறனுடைய புலம்பெயர்வோர் மீது கவனம் செலுத்தி) குருணாகலை, அம்பாறை, மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் ஒரு முன்னோடியான மாதிரியினை வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்பல் அமைச்சு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் ILOவினால் 2012 -2014 வரை அமுல்படுத்தியமை.

2. 2014 இல் திரும்பிவரும் புலம்பெயர் தொழிலாளர்களின் மீள் இணைவு மீதான உபயர் கொள்கைக்காக வரைபு தந்திரோபாய வழிகாட்டுதல்களின் வரைபினுடைய முன்னோடி மாதிரி முனைப்புக்கள் மற்றும் உருவாக்கங்களின் விளைவுகள் மீளாய்வு செய்யப்படுதல்.

3. திரும்பிவருதல் மற்றும் மீள இணைதலை மையப்படுத்தி வேலைவாய்ப்பிற்கான புலம்பெயர்வின் நிலை குறித்த சுருக்கம்: கொள்கையில் இருந்து செயற்பாட்டுக்கு 2014 பிரசுரமானது தொழிலாளர் புலம்பெயர்வு, திரும்பிவருதல், மீள இணைதல், மற்றும் அபிவிருத்தி மீதான நூலின் டெஸ்க் மீளாய்வு.

4. தந்திரோபாய வழிநடத்துதல்களைக் கலந்துரையாடுவதற்கும், இடையீட்டுப் பரப்பிற்கான ஒரு உபகொள்கை பணிச்சட்டகத்தினை விருத்தி செய்வதற்காகவும் திரும்பிவருதல் மற்றும் மீள இணைதல் குறித்த ஒரு இரண்டு நாள் தேசிய கலந்துரையாடலானது ஒக்ரோபர் 2014 நடாத்தப்பட்டது.

5. தொழிலாளர் புலம்பெயர்வு மீதான, தேசிய மதியுரைக்குழுவினால் திரும்பிவருதல் மற்றும் மீள இணைதல் மீதான உபகொள்கை பணிச்சட்டகம் நவம்பர் 2014ல் உறுதிப்படுத்தப்பட்டது.

6. தொழிலாளர் புலம்பெயர்வு மீதான தேசிய மதியுரைக்குழுவின் வழிகாட்டுதலின் கீழ் திரும்பிவருதல் மற்றும் மீள இணைதல் மீதான தேசிய செயற்திட்டத்தின் வரைபை பரந்த வீச்சுடைய பங்காண்மையாளர் மற்றும் நிபுணர்களின் உள்ளீடுகளுடன் விருத்தி செய்தல் ஜுன்; 2015.

7. 2015 ஜுலையில் தேசிய பங்காண்மையாளர்களிடையே திரும்பிவருதல் மற்றும் மீளிணைதல் மீதான தேசிய செயற்திட்டத்தின் வரைபை செல்லுபடியாக்கும் பயிற்சிப்பட்டறையில் இவ் வரைபை சமர்ப்பித்தலும் MoFE மற்றும் SLBFE என்பவற்றுடன் திரும்பிவருதல் மற்றும் மீள இணைதல் மீதான தேசிய செயற்திட்டத்தை இறுதிப்படுத்தலும் ஒக்ரோபர் 2015.

## திரும்பிவருதல் மற்றும் மீளிணைதல் குறித்த உபகொள்கையின் முக்கியமான கொள்கைகள்:

- எல்லாப் புலம்பெயர் தொழிலாளர்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தல்.
- அபிவிருத்தியில் பங்காளர்களாக புலம்பெயர் தொழிலாளர்களை மதித்தல்.
- அனைவரையும் உள்ளடக்குதல், பாரபட்சமின்மை மற்றும் பால்நிலை சமத்துவம் போன்ற விழுமியங்களை மேல்நிலைப்படுத்தல்.
- புலம்பெயர் தொழிலாளர்களின் வாழ்வைப் பாதிக்கும் தீர்மானம் எடுத்தல்கள் மற்றும் கொள்கை கலந்துரையாடல்களில் புலம்பெயர் தொழிலாளர்களை ஈடுபடுத்துவதற்கு அவர்களை வலுவூட்டுதல்.
- புலம்பெயர் தொழிலாளர்களின் கூட்டுக்குரல் எழுப்புகையை கலந்தாலோசித்தலும் ஊக்குவித்தலும்.
- இலங்கைப் பொருளாதாரத்திற்கு புலம்பெயர் தொழிலாளர்களின் பங்களிப்பை ஏற்றுக்கொண்டு அங்கீகரித்தல்.
- பாதுகாப்பானதும் மகத்துவமானதுமான திரும்பி வருகையையும் மீளிணைவு செயன்முறையையும் உறுதிப்படுத்துதல்.
- திரும்பிவரும் தொழிலாளர்களை உள்ளூர் தொழிற்படைக்குள் உள்வாங்கிக்கொள்ளுதலும் மகத்துவமான வேலைவாய்ப்பு பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தலும்.
- சுரண்டல், துஷ்பிரயோகம், கட்டாயத் திருப்பி அனுப்புகை, மனவழுத்தம், அல்லது மனவடு நிறைந்த அனுபவங்களையும் கொண்டுள்ள புலம்பெயர் தொழிலாளர்களுக்கு விசேட கவனம் கொடுப்பதில் அழுத்தம் கொடுத்தல்.
- கொள்கை பணிச்சட்டகமானது புலம்பெயர்வின் எல்லாக் கட்டங்களிலும் சுழல்வினையும் ஒருங்கிணைப்பதையும் உறுதிப்படுத்துதல். அதாவது புறப்படுவதற்கு முன்பு, சேவையின்பொழுது, திரும்பிவருதல், மீள இணைதல் மற்றும் ஒவ்வொரு கட்டத்திலும் தந்திரோபாயப்படுத்துவதற்கான உரிமை அடிப்படையிலான அணுகுமுறையைக்கைக்கொள்ளுதல்.

## உபகொள்கை விடயங்களும் தந்திரோபாயங்களும்:

திரும்பிவருதல் மற்றும் மீள இணைதல் மீதான தேசிய செயற்திட்டமானது சமூக பொருளாதார, உளவியல்,
சிவில் மற்றும் அரசியல் மீளிணைவு அம்சங்களை உள்ளடக்கிய ஒரு முழுமையான அணுகுமுறையைக் கைக்கொண்டது.

## வரவுசெலவுத்திட்டம்

நிதிகள் SLBFEஇன் ஒதுக்கீடுகள் ஊடாகவும், ஏனைய தேசிய மற்றும் சர்வதேச நிதிமூலங்களிலிருந்தும் மற்றும் பொருத்தமாயின் நிதி சேகரிப்பின் ஊடாகவும் நிதியீட்டம் செய்யப்பட்டிருக்கும்.



# திரும்பிவருவோரின்
# சமூக ஒருங்கிணைவு

உபகொள்கை விடயப்பரப்பு 1:

## திரும்பிவருவோரின் சமூக ஒருங்கிணைவு

ஒருங்கிணைவின் எல்லா ஏனைய உள்ளீடுகளுக்கும் புலம்பெயர் திரும்பிவருவோரின் சமூக மீளிணைவு அடிப்படையானது. நாட்டுக்கு திரும்பிவரும் புலம்பெயர் தொழிலாளி அவளது அல்லது அவனது குடும்பத்தோடு சில வருடங்கள் இல்லாதிருந்துள்ளார். நாட்டுக்கு திரும்பிவரும் புலம்பெயர் தொழிலாளி அவளது அல்லது அவனது குடும்பத்திடம் சனசமூகத்திடம், சமுதாயத்திடம், நாட்டோடோ சில வருடங்கள் இல்லாதிருந்துள்ளார். இதற்கு மேலாக புலம்பெயர் திரும்பிவருபவர் வேறொரு கலாசாரம் மற்றும் சூழலின் அனுபவத்துடனும் அதற்கு முகம் கொடுத்தும் திரும்பி வருகிறார். அத்துடன் இவைகள் அந்தப் புலம்பெயர் தொழிலாளியின் நடத்தையில், சிந்தனையில், மனோபாவத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கக்கூடும். சமூக மீளிணைவு நிகழ்ச்சித்திட்டங்களானவை ஒரு தம்பதி, பிள்ளைகள், சனசமூகம் என்ற பார்வை நோக்குகளில் இருந்து பல்வகைப்பட்ட சமூகப் பிரச்சினைகளைக் கணக்கில் எடுக்க வேண்டும். மீள இணையும் காலந்தாழ்த்துகையைத் தணிப்பதற்காக குடும்பம் மற்றும் சமூகத்தினை வலுவூட்டுதல் புலம்பெயர் தொழிலாளர்களின் சாதக விம்பத்தைக் கட்டியெழுப்பல் என்பன அவசியமானது. சிறந்த சமூகப் பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சிகள் திரும்பிவருவோருக்கு அளிப்பதற்கு பரிசீலிக்கப்பட வேண்டியனவாக உள்ளன. பால்நிலைக் கூருணர்வு அணுகுமுறை மற்றும் சுரண்டல், துஷ்பிரயோகம் வஞ்சக்கடத்தல் என்பவற்றை அனுபவித்த அந்த புலம்பெயர்வாளர்கள் மீது விசேட கவனம் செலுத்துதல் என்பன சமூக ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் முக்கியமானவையாகும்.

தந்திரோபாயங்கள்:

1.1 புலம்பெயர்வுத் தொழிலாளர்களின் பாதுகாப்பானதும் மகத்துவமிக்கதுமான திரும்பிவருகையை உறுதிப்படுத்துவதற்கு ஒரு பொறிமுறையை நிறுவனமயமாக்குதல்.

1.2 புலம்பெயர் தொழிலாளர்களின் பரந்த அடிப்படையிலான சாதக விம்பத்தினைக் கட்டியெழுப்புகை.

1.3 புலம்பெயர் திரும்பி வருவோருக்கான சமூகப் பாதுகாப்புத்திட்டம்.

1.4 சிறுவர்களின் விருத்திக்கான விசேட கவனக் குவிப்புடன் புலம்பெயர் தொழிலாளர்களின் நலனோம்பலும் பாதுகாப்பும்.

1.5 புலம்பெயர் தொழிலாளர்களினுடைய சிறுவர்களின் திறன் விருத்தியாக்கல் மற்றும் கல்வி ஊக்குவிப்பு.

## உபகொள்கை விடயம் ஒன்று: திரும்பிவருவோரின் சமூக மீளிணைவு

இலக்கு: புலம்பெயர் தொழிலாளர்களின் கண்ணியமானதும் பாதுகாப்பானதுமான திரும்பிவருகையும் மற்றும் அவர்களது குடும்பத்தோடும் சமூகத்தோடும் பாதுகாப்பானதும் அக்கறைகொண்டதுமான வினைத்திறனான மீளிணைவும்

| விளைவு | வெளியீடு | முக்கியமான செயற்பாடுகள் | செயற்பாட்டுச் குறிகாட்டிகள்(2016-2018) | முன்னணி முகவர்கள் (LA) மற்றும் ஆதரவு முகவர்கள் SA) | 2016 | 2017 | 2018 | வரவு செலவுத்திட்டம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தந்திரோபாயம் 1. புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பானதும் மகத்துவமானதுமான திரும்பிவருகையையும் மீள் ஒன்றிணைவையும் உறுதிப்படுத்துவதற்கான ஒரு பொறிமுறையை நிறுவனமயப்படுத்தல் | | | | | | | | |
| 1. நிறுவனமயப்படுத்தப்பட்ட பொறிமுறைகள் ஊடாக புலம்பெயர் திரும்பிவருவோருக்கு சுகாதாரம், உள சமூகவியல் ஆதரவுத்திறன் விருத்தி, கடன், வீட்டுக்கடன்கள் என்ற சேவைகளைக் கிடைக்கச் செய்தல். | 1.1 விசேட அலகொன்று உருவாக்கப்படுவதுடன் மற்றும் அதனை ஏனைய தொடர்புடைய துறை முகவரலாயங்களுக்கு இடையிலும் அவர்களது கொள்கைகள் மற்றும் திட்டங்களுக்கு இடையிலும் இணைப்புக்களை நிறுவுதல். | 1.1 பாதுகாப்பானதும் கண்ணியமானதுமான திரும்பிவருதலுக்கும் மீளிணைவுக்கும் ஆதரவு அளிப்பதற்காக SLBFE தலைமைச் செயலகத்தில் ஒரு விசேட அலகானது போதிய பணியாட்களுடனும் பிராந்திய மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு பொறிமுறைகளுடன் நிறுவப்படுதல். | 1.1 பல்வேறு மட்டங்களில் SLFBE மற்றும் முறைசார் முகவர்கள் இணைந்து செயற்படுவதற்காக முறைமைகள் மற்றும் ஒழுங்குகளை விருத்தி செய்தல் பிரதேச செயலக மட்டத்தில் திரும்பிவரும் புலம்பெயர்வோர் தொடர்பாக ஒரு தரவுத்தளத்தை நிறுவிக்கொள்வதுடன் அதனைப் பேணிக்கொள்ளல்.<br><br>1.1 ஆகக் குறைந்தது மாதத்திற்கு ஒரு தடவை ஒருங்கிணைப்புக் குழுக்கள் கூடுவதுடன் பங்காண்மையாளர்களில் ஆகக் குறைந்தது 70% சமூகமளித்தல். | MoFE, SLBFE (LA)<br><br>சுகாதார அமைச்சு (SA)<br><br>மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகள் (SA)<br><br>மாவட்ட செயலகங்கள் (SA)<br><br>பிரதேச செயலகங்கள் (SA) | X | | | |
| | 1.2 பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் ஒரே இடத்தில் சேவை வழங்கும் நிலையங்களை(one stop centre) நடைமுறைப்படுத்தலும் அணுகக்கூடியதாகவும் ஆக்குதல். | 1.2 புலம்பெயர்வு வளங்கள் நிலையத்தை பலப்படுத்தி மீளமைத்து ஓரிடத்தில் சேவை வழங்கும் நிலையங்களாக நிறுவி மாவட்ட பிரதேச செயலக மட்டத்தில் பொருளாதார / ஆரோக்கியம் / நிதி / திறன் / பயிற்சி என்பனவற்றில் தகவல்களையும் சேவைகளையும் வழங்குதல். | 1.2 5000 புலம்பெயர்ந்து திரும்பியோர் ஒரு இடத்தில் சேவை நிலையங்களில் (one stop centre) இருந்து சேவைகளைப் பெற்றுக்கொண்டனர். | | X | X | X | |

## உபகொள்கை விடயம் ஒன்று: திரும்பிவருவோரின் சமூக மீளிணைவு

இலக்கு: புலம்பெயர் தொழிலாளர்களின் கண்ணியமானதும் பாதுகாப்பானதுமான திரும்பிவருகையும் மற்றும் அவர்களது குடும்பத்தோடும் சமூகத்தோடும் பாதுகாப்பானதும் அக்கறைகொண்டதுமான வினைத்திறனான மீளிணைவும்

| விளைவு | வெளியீடு | முக்கியமான செயற்பாடுகள் | செயற்பாட்டுச் குறிகாட்டிகள்(2016-2018) | முன்னணி முகவர்கள் (LA) மற்றும் ஆதரவு முகவர்கள் SA) | 2016 | 2017 | 2018 | வரவு செலவுத்திட்டம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தந்திரோபாயம் 1. புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பானதும் மகத்துவமானதுமான திரும்பிவருகையையும் மீள் ஒன்றிணைவையும் உறுதிப்படுத்துவதற்கான ஒரு பொறிமுறையை நிறுவனமயப்படுத்தல் | | | | | | | | |
| | 1.3 கிராமசேவகர் மட்டத்தில் ஒருங்கிணைப்புக் குழுக்கள் நிறுவப்பட்டு வினைத்திறனான சேவை வழங்குதல். | 1.3 மீள இணைவின் வினைத்திறனான முகாமைத்துவத்திற்காக கிராமசேவகர் மட்ட இணைப்புடன் பிரதேச செயலகத்தில் எல்லாப் பொருத்தமான பங்காண்மையாளர்களுடனும் ஒருங்கிணைப்புக் குழுக்களை நிறுவுதல். | 1.3 வருடத்திற்கு இரு தடவை எனும் அடிப்படையில் ஒருங்கிணைப்புக் குழுவால் தீர்க்கப்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கை. | | x | x | x | |
| | 1.4 புலம்பெயர் திரும்பி வருவோருக்கு வீட்டுக்கடன்களை சுலபமாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல். | 1.4 மாவட்ட மட்டத்தில் தற்போதுள்ள வீட்டு கடன் நிகழ்ச்சித்திட்டங்களை புலம்பெயர் தொழிலாளர்களுக்காக மீள்பார்வை செய்வதுடன் கடன் விடயங்களை அதிகம் புலம்பெயர்வோருக்கு பொருத்தமானதாக்குதல். | 1.4 5000 வீட்டுக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன மற்றும் பின்தொடரப்பட்டுள்ளன. | | x | | | |
| | 1.5 திரும்பிவருதல் மற்றும் மீளஇணைதலுக்கான திட்டமிடல் குறித்த அமர்வுகளை புறப்படுவதற்கு முன்னைய பயிற்சியில் உள்ளடக்கப்படுதல். | 1.5 புலம்பெயர்வோர் விடயங்கள் மீதான ஒரு தகவல் பொதி ஊடாக, திரும்பிவருதல் மற்றும் மீள இணைதலுக்கான திட்டமிடல் தொடர்பாக வருங்கால புலம்பெயர்வோருக்கு உணர்வூட்டுவதற்கு போதிய தகவல்களை உள்ளடக்குதல். | 1.5 திரும்பிவரும் புலம்பெயர்வோர் திரும்பிவருதல் மற்றும் மீளிணைதல் மீதான முன்திட்டமிடல்கள் சுலபமாக குடியமர்வதிலும் எவ்வாறு குடியமர்தல் என்பதிலும் தமக்கு உதவியதாக தெரிவிக்கின்றனர் (நேர்காணல்கள்). தாயகம் திரும்பியோரிடம் மதிப்பீடு செய்யப்பட்டதில் 60%மானோர் சாதகமான கருத்தைக் கொண்டுள்ளனர். | | x | | | |

# உபகொள்கை விடயம் ஒன்று: திரும்பிவருவோரின் சமூக மீளிணைவு

இலக்கு: புலம்பெயர் தொழிலாளர்களின் கண்ணியமானதும் பாதுகாப்பானதுமான திரும்பிவருகையும் மற்றும் அவர்களது குடும்பத்தோடும் சமூகத்தோடும் பாதுகாப்பானதும் அக்கறைகொண்டதுமான வினைத்திறனான மீளிணைவும்

| விளைவு | வெளியீடு | முக்கியமான செயற்பாடுகள் | செயற்பாட்டுச் குறிகாட்டிகள்(2016-2018) | முன்னணி முகவர்கள் (LA) மற்றும் ஆதரவு முகவர்கள் SA) | 2016 | 2017 | 2018 | வரவு செலவுத்திட்டம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தந்திரோபாயம் 1. புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பானதும் மகத்துவமானதுமான திரும்பிவருகையையும் மீள் ஒன்றிணைவையும் உறுதிப்படுத்துவதற்கான ஒரு பொறிமுறையை நிறுவனமயப்படுத்தல் | | | | | | | | |
| | 1.6 மீள இணைதல் பற்றிய தகவல்களை திரும்பிவரும் புலம்பெயர்வோருக்கு வழங்குவதற்காக இலங்கை பணியகங்களில் பொறிமுறைகளையும் ஒழுங்குவிதிகளையும் நிறுவுதல். | 1.6 இலங்கைக்கு திரும்பிவருவோருக்கு புலம்பெயர்வோருக்கான மீளிணைவுச் சேவைகள் பற்றிய தகவல்களை துண்டுப்பிரசுரங்கள் மற்றும் ஏனைய வழிவகைகள் ஊடாக வழங்கி அவர்களது சீரான திரும்பி வருகையை இலகுவாக்குதல். | 1.6 குறித்த எண்ணிக்கையான திரும்பி வரும் புலம்பெயர்வாளர்கள் தமது திரும்பிவருதல் மற்றும் மீளஇணைவில் இலங்கையின் பணியகங்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியோராய் இருந்துள்ளனர்.<br>1.6 மீள்திரும்புதல் மற்றும் மீளிணைவு பற்றிய தகவல்களும் மற்றும் மீள்திரும்புவோருக்கான சேவைகள் பற்றிய விடயங்களுமடங்கிய தகவல் பொதி வெளிநாட்டுப் பணியகத்தில் கிடைக்கப்பெறுகிறது. | | | x | x | |
| | 1.7 சீரான திரும்பி வருகை மற்றும் மீளிணைவுக்காக பணி ஒப்பந்தங்களைக் கண்காணிப்பதற்காக ஒழுங்குமுறைகள் நிறுவப்பட்டுள்ளன. | 1.7 திரும்பிவருதல் மற்றும் திருப்பி அனுப்பப்படுதலின் பொறுப்புக்கள் பற்றிய சரத்துக்களை உள்ளடக்கிய வேலைவாய்ப்பு ஒப்பந்தத்தின் அமுல்படுத்துகையை உறுதிப்படுத்துதல் (பணியாளரதும் வேலைவழங்குனரதும் பொறுப்புக்கள் அதிலும் விசேடமாக வீட்டு வேலைகளை குறிப்பிட வேண்டும்.) | 1.7 அனைத்து வேலைவாய்ப்பு ஒப்பந்தங்களிலும் திரும்பி வருதல் மற்றும் திருப்பி அனுப்பப்படுதலில் பணியாளர் மற்றும் வேலைவழங்குனர் ஆகியோரின் பொறுப்புக்கள் உள்ளடக்கப்படுகின்றன. | | | x | x | |

| உபகொள்கை விடயம் ஒன்று: திரும்பிவருவோரின் சமூக மீளிணைவு | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| இலக்கு: புலம்பெயர் தொழிலாளர்களின் கண்ணியமானதும் பாதுகாப்பானதுமான திரும்பிவருகையும் மற்றும் அவர்களது குடும்பத்தோடும் சமூகத்தோடும் பாதுகாப்பானதும் அக்கறைகொண்டதுமான வினைத்திறனான மீளிணைவும் | | | | | | | | |
| விளைவு | வெளியீடு | முக்கியமான செயற்பாடுகள் | செயற்பாட்டுச் குறிகாட்டிகள்(2016-2018) | முன்னணி முகவர்கள் (LA) மற்றும் ஆதரவு முகவர்கள் SA) | 2016 | 2017 | 2018 | வரவு செலவுத்திட்டம் |
| தந்திரோபாயம் 1. புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பானதும் மகத்துவமானதுமான திரும்பிவருகையையும் மீள் ஒன்றிணைவையும் உறுதிப்படுத்துவதற்கான ஒரு பொறிமுறையை நிறுவனமயப்படுத்தல் | | | | | | | | |
| | 1.8 தமது ஒப்பந்தம் முடியமுன்னர் ஒப்பந்தத்தை முடித்துக்கொண்ட புலம்பெயர் தொழிலாளர்களின் சீரான திரும்பிவருகைக்கு உதவுவதற்காக ஒழுங்குமுறைகள் நிறுவப்பட்டுள்ளன. | 1.8 முதிர்ச்சிக் காலத்திற்கு முந்திய புறப்படுகைகளின் பொழுது தடையற்ற திரும்பிவருகையை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஊடாக தெளிவான செயன்முறைகளை நிறுவுதல். | 1.8 முதிர்ச்சிக் காலத்திற்கு முந்திய புறப்படுகை குறித்த ஒழுங்குகளும் வழிகாட்டிகளும் அதேபோல இலகுபடுத்துவதற்கான SLBFE யினது பாத்திரம் மற்றும் பொறுப்புக்களும் காணப்படுகின்றன மற்றும் பின்தொடரப்படுகின்றன. | | | X | | |

## உபகொள்கை விடயம் ஒன்று: திரும்பிவருவோரின் சமூக மீளிணைவு

இலக்கு: புலம்பெயர் தொழிலாளர்களின் கண்ணியமானதும் பாதுகாப்பானதுமான திரும்பிவருகையும் மற்றும் அவர்களது குடும்பத்தோடும் சமூகத்தோடும் பாதுகாப்பானதும் அக்கறைகொண்டதுமான வினைத்திறனான மீளிணைவும்

| விளைவு | வெளியீடு | முக்கியமான செயற்பாடுகள் | செயற்பாட்டுச் குறிகாட்டிகள்(2016-2018) | முன்னணி முகவர்கள் (LA) மற்றும் ஆதரவு முகவர்கள் SA) | 2016 | 2017 | 2018 | வரவு செலவுத்திட்டம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தந்திரோபாயம் 2. புலம்பெயர் தொழிலாளர்களின் பரந்த அடிப்படையிலான சாதக பிம்பம் ஒன்று கட்டப்படுதல் | | | | | | | | |
| 2. இலங்கைச் சமூகத்தின் புலம்பெயர் தொழிலாளர்களை நோக்கிய மனோபாவம் மற்றும் பதிற்செயற்பாடு சாதகமானதாக மாற்றப்படுதல். | 2.1 பொருத்தமான ஊடக நிகழ்ச்சிகள் ஊடாக (அச்சு ஊடகம், தொலைக்காட்சி மற்றும் வானொலி) புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பங்களிப்புக் குறித்து பொது விழிப்புணர்வு.<br><br>2.1 புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பங்களிப்புக் குறித்து பரந்துபட்ட தகவல்களை திணைக்களங்களின் ஆவணங்களில் பிரச்சாரப்படுத்தல்.<br><br>2.2 SLBFE யின் விசேட அலகானது உரிய அரச முகவராலயங்களுடன் இணைந்து புலம்பெயர் தொழிலாளர்களுக்கு சிறப்புரிமைகளை வழங்கும் வகையில் முறைமைகள் மற்றும் செயன்முறைகளை நிறுவுதல். | 2.1 புலம்பெயர் தொழிலாளர்கள் குறித்த ஒரு சாதகமான தோற்றத்தினை ஊக்குவிப்பதற்காக ஊடகத்துறை அமைச்சுடன் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையை உருவாக்குதல். பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி நோக்கிய புலம்பெயர் தொழிலாளர்கள் பங்களிப்பு மீதான பொது விழிப்புணர்வை உருவாக்குதல் (வருமான அனுப்புகைகள், திறன் மாற்றுகை, மனித முதலீடு இன்னும் பல)<br><br>2.2 குடிசனமதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்துடன் புலம்பெயர் தொழிலாளர்களின் பங்களிப்பு குறித்தக்களையும் தரவுகளையும் அவர்களது வருடாந்த புள்ளிவிபர அறிக்கையில் சேர்த்துக்கொள்வதற்காக அவர்களுடன் ஒப்பந்தம் செய்தல். | 2.1. பிரபல்யமான ஊடகக் காட்சிகளில் / தொலைக்காட்சி நாடகம், உள்ளூர் வானொலி நிகழ்ச்சிகள் என்பவற்றில் அபிவிருத்தியில் புலம்பெயர் தொழிலாளர்களின் பங்களிப்புக்களை காட்சிப்படுத்தல்<br><br>2.1. அச்சு ஊடகத்தில் விசேடத்துவம் மிகுந்த எழுத்தாளர்களினால் புலம்பெயர் தொழிலாளர்கள் தொடர்பான கட்டுரைகளைப் பிரசுரித்தல்.<br><br>2.2 புலம்பெயர் தொழிலாளர்களின் பங்களிப்பானது தேசிய புள்ளிவிபரத்தில் அதாவது மத்தியவங்கி அறிக்கை குடிசனமதிப்பீட்டுத் தகவல், தொழிற்படைப் பங்குபற்றுகைக் மதிப்பீடு என்பனவற்றில் உள்ளடக்கப்படுகிறது. | ஊடகத்துறை அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு மற்றும் MoFE, SLBFE (LA)<br><br>மாகாணசபைகள் மற்றும் உள்ளுராட்சி அதிகாரசபைகள் (SA)<br><br>மாவட்ட செயலகங்கள் (SA)<br><br>பிரதேச செயலகங்கள் (SA)<br><br>ஊடக முகவர்கள் (SA)<br><br>சிவில் சமூகங்கள் (SA)<br><br>விமானநிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து அதிகாரசபை (SA) | | x | | |

## உபகொள்கை விடயம் ஒன்று: திரும்பிவருவோரின் சமூக மீளிணைவு

இலக்கு: புலம்பெயர் தொழிலாளர்களின் கண்ணியமானதும் பாதுகாப்பானதுமான திரும்பிவருகையும் மற்றும் அவர்களது குடும்பத்தோடும் சமூகத்தோடும் பாதுகாப்பானதும் அக்கறைகொண்டதுமான வினைத்திறனான மீளிணைவும்

| விளைவு | வெளியீடு | முக்கியமான செயற்பாடுகள் | செயற்பாட்டுச் குறிகாட்டிகள்(2016-2018) | முன்னணி முகவர்கள் (LA) மற்றும் ஆதரவு முகவர்கள் SA) | 2016 | 2017 | 2018 | வரவு செலவுத்திட்டம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தந்திரோபாயம் 2. புலம்பெயர் தொழிலாளர்களின் பரந்த அடிப்படையிலான சாதக பிம்பம் ஒன்று கட்டப்படுதல் | | | | | | | | |
| | | 2.3 மாவட்ட மட்டத்தில் அரச அனுசரணையுடன் சர்வதேச புலம்பெயர்வாளர் தினம் ஒன்றைக் கொண்டாடுதல் மற்றும் மீள்திரும்பிய தொழிலாளர்களுக்கு விருதுகளையும் ஆதரவினையும் வழங்குதல்.<br><br>2.3 விசேட அளவுகோலினை அடிப்படையாகக் கொண்டு புலம்பெயர்ந்து மீள்திரும்புவோருக்கு வோருக்கு விசேட அடையாள அட்டைகளை வழங்குதல்.<br><br>2.3 தொந்தரவுகளைத் தவிர்ப்பதற்காக விமானநிலையத்தில் ஒரு நட்புறவான வரவேற்புக் கூடத்தை புலம்பெயர்ந்து மீள்திரும்புவோருக்கு வோருக்கு என நிறுவுவதுடன் அவர்கள் தமது வீடுகளை தாமதம் இன்றியும் பாதுகாப்பாகவும் சென்றடைய உதவுதல். | 2.3. சர்வதேச புலம்பெயர்வோர் தினமானது(IMD) மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின் நிகழ்வு நாட்குறிப்பில் உள்ளடக்கப்படுகிறது.<br><br>2.3 சர்வதேச புலம்பெயர்வோர் தின கொண்டாட்டங்களில் சிவில் சமூகத்தின் பங்குபற்றுகையும் ஈடுபாடும்.<br><br>2.3 அரச சேவைகளை விசேடமானமுறையில் பெற்றுக்கொள்வதற்காக புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கும் விசேட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை.<br><br>2.3 புலம்பெயர் தொழிலாளர்கள் விமான நிலையங்களில் வரும்பொழுது சினேகமான வரவேற்பு கருமபீடம் குறித்த அவர்களது பாராட்டு அல்லது முறைப்பாட்டு அனுபவத்தின் எண்ணிக்கை. | | | | | |

| உபகொள்கை விடயம் ஒன்று: திரும்பிவருவோரின் சமூக மீளிணைவு | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| இலக்கு: புலம்பெயர் தொழிலாளர்களின் கண்ணியமானதும் பாதுகாப்பானதுமான திரும்பிவருகையும் மற்றும் அவர்களது குடும்பத்தோடும் சமூகத்தோடும் பாதுகாப்பானதும் அக்கறைகொண்டதுமான வினைத்திறனான மீளிணைவும் | | | | | | | | |
| விளைவு | வெளியீடு | முக்கியமான செயற்பாடுகள் | செயற்பாட்டுச் குறிகாட்டிகள்(2016-2018) | முன்னணி முகவர்கள் (LA) மற்றும் ஆதரவு முகவர்கள் SA) | 2016 | 2017 | 2018 | வரவு செலவுத்திட்டம் |
| தந்திரோபாயம் 2. புலம்பெயர் தொழிலாளர்களின் பரந்த அடிப்படையிலான சாதக பிம்பம் ஒன்று கட்டப்படுதல் | | | | | | | | |
| | | 2.3 பண அனுப்புகைகளை அடிப்படையாகக் கொண்டு தீர்வையற்ற வாகன அனுமதித் திட்டங்களை அமுல்படுத்தல்.<br><br>2.3 சுய வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கு தேவையான பொருட்களை இறக்குமதி செய்வதற்கு திரும்பி வருவோருக்காக தீர்வையற்ற சலுகைகள் வழங்கப்படுதல்.<br><br>2.3 குறைந்த திறன் வகைப்பாட்டில் உள்ளவர்களில் உத்தியோகபூர்வ வழிவகைகள் ஊடாக அனுப்பப்பட்டட உயர் பண அனுப்புகைகளுக்காக விருது வழங்கும் திட்டம் ஒன்றை ஆரம்பித்தல்.<br>. | 2.3 புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வருடத்திற்கு வழங்கப்படும் தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை.<br><br>2.3. விசேட அனுமதிப்பத்திரங்களைப் பாவித்து புலம்பெயர் தொழிலாளர்களால் இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் எண்ணிக்கையும் வகையும். | | | | | |

| உபகொள்கை விடயம் ஒன்று: திரும்பிவருவோரின் சமூக மீளிணைவு | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| இலக்கு: புலம்பெயர் தொழிலாளர்களின் கண்ணியமானதும் பாதுகாப்பானதுமான திரும்பிவருகையும் மற்றும் அவர்களது குடும்பத்தோடும் சமூகத்தோடும் பாதுகாப்பானதும் அக்கறைகொண்டதுமான வினைத்திறனான மீளிணைவும் | | | | | | | | |
| விளைவு | வெளியீடு | முக்கியமான செயற்பாடுகள் | செயற்பாட்டுச் குறிகாட்டிகள்(2016-2018) | முன்னணி முகவர்கள் (LA) மற்றும் ஆதரவு முகவர்கள் SA) | 2016 | 2017 | 2018 | வரவு செலவுத்திட்டம் |
| தந்திரோபாயம் 3. புலம்பெயர் திரும்பிவருவோருக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டம் | | | | | | | | |
| 3. புலம்பெயர் தொழிலாளர்கள் தமக்காக நிறுவப்பட்ட காப்புறுதி மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் தமக்கு நன்மை கிடைக்கும் என நம்பிக்கை வைத்துள்ளனர். | 3.1 ஒரு பயன்மிக்க மற்றும் கவரக்கூடிய காப்புறுதி திட்டம் புலம்பெயர்வோருக்கு கிடைக்கக் கூடியதாகவுள்ளது மற்றும் அது சுலபமாக அடையக் கூடியதாக உள்ளது. | 3.1 தற்போதுள்ள காப்புறுதி திட்டங்களை புலம்பெயர் தொழிலாளர்களுக்கு அவைகள் மிகவும் நன்மையளிப்பதாகவும் தையும் மிகவும் இலகுவாக கையாள்வதனையும் உறுதிப்படுத்துவதற்காக அவற்றினை மீளாய்வு செய்தல். | 3.1 வருடாந்தம் புலம்பெயர் தொழிலாளர்களில் 2%த்தினர் காப்புறுதித் திட்டத்தில் சேருகின்றனர். | MoFE, SLBFE (LA)<br>நிதியமைச்சு (LA)<br>கொள்கை திட்டமிடல் அமைச்சு (LA) வங்கிகள் (SA)<br>நிதி நிறுவனங்கள் (SA)<br>காப்புறுதிக் கம்பனிகள் (SA)<br>காப்புறுதி சபை. | x | x | x | |
| | 3.2 வீடுகளில் பணிபுரியும் பெண்கள் உட்பட திறன் குறைந்த புலம்பெயர் தொழிலாளர்களுக்கு பொருத்தமான சமூகப் பாதுகாப்புத் திட்டம் / ஓய்வூதியத்திட்டம் ஒன்றை நிறுவுதல். | 3.2 திறன் குறைந்த புலம்பெயர் தொழிலாளர்களுக்கு நன்மையளிக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டம் / ஓய்வூதியத்திட்டத்திற்கான முறைமைகளையும் ஒழுங்குவிதிகளையும் உருவாக்குதல். பெண் வீட்டுப் பணியாளர்கள் உட்பட குறைந்த திறனுடைய பணியாளர்களுக்கு சமூகப் பாதுகாப்புதிட்டம் ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகம் செய்தல். | 3.2 சமூகப் பாதுகாப்புத்திட்டத்தில் அல்லது ஓய்வூதியத் திட்டத்தில் நன்மையடையும் மீள்திரும்புவர்களின் எண்ணிக்கை. | | x | | | |

## உபகொள்கை விடயம் ஒன்று: திரும்பிவருவோரின் சமூக மீளிணைவு

இலக்கு: புலம்பெயர் தொழிலாளர்களின் கண்ணியமானதும் பாதுகாப்பானதுமான திரும்பிவருகையும் மற்றும் அவர்களது குடும்பத்தோடும் சமூகத்தோடும் பாதுகாப்பானதும் அக்கறைகொண்டதுமான வினைத்திறனான மீளிணைவும்

| விளைவு | வெளியீடு | முக்கியமான செயற்பாடுகள் | செயற்பாட்டுச் குறிகாட்டிகள்(2016-2018) | முன்னணி முகவர்கள் (LA) மற்றும் ஆதரவு முகவர்கள் SA) | 2016 | 2017 | 2018 | வரவு செலவுத்திட்டம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தந்திரோபாயம் 4. புலம்பெயர் தொழிலாளர்களுடைய குடும்ப அங்கத்தவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரி அத்துடன் அவர்களின் பிள்ளைகளின் விருத்தியில் விசேட கவனம் செலுத்துதல் | | | | | | | | |
| 4. புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்ப உறுப்பினர்களும் பிள்ளைகளும் மிகவும் தேவையான சேவைகளை பெறுகிறார்கள் மற்றும் வாழ்க்கைத்தரம் முன்னேற்ற மடைந்துள்ளது. | 4.1 புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்ப தகவல்தளம் ஒன்று மாவட்ட மட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ளது மற்றும் சேவைகள் கிடைக்கக்கூடியதாகவும் அடையக்கூடியதாகவும் உள்ளது. | 4.1 புலம்பெயர் குடும்பத்தினரின் தரவுகள் தயாரிக்கப்படுதல் மற்றும் கவனம் தேவைப்படும் விடயங்களை இனம் காணுதல் மற்றும் சேவைகளை வழங்குதல். | 4.1 கிடைக்கக்கூடிய குடும்பத் தரவுகளைக்கொண்ட அனைத்துமடங்கிய தகவல்த்தளம். | MoFE, SLBFE (LA)<br>மாகாண சபைகள் (SA)<br>மாவட்ட செயலகங்கள் (SA)<br>பிரதேச செயலகங்கள் (SA)<br>சிறுவர் நன்னடத்தை கவன திணைக்களம் (SA)<br>சமூக சேவைகள் திணைக்களம் (SA) | | X | X | |
| | 4.2 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உதவிகள் தேவைப்படும் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சிறுவர்களை இனம்காணுவதற்கு இயலுமானவர்களாக இருப்பதுடன், அவர்களை பொருத்தமானவர்களிடம். அனுப்பி வைத்தல். | 4.2 அரச மற்றும் ஏனைய ஆதரவு சேவைகள் தொடர்பான வழிப்படுத்தல்களுக்காக ஒரு வழிகாட்டியை திரும்பி வருவோருக்காக விருத்தி செய்தல். | 4.2 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவைகள் வழிகாட்டியை பிரதேச செயலக மட்டத்தில் பயன்படுத்துகின்றனர். | Mo சிறுவர் விவகாரங்கள் மற்றும் (SA)<br>சிறுவர் பாதுகாப்பு அமைச்சு (SA)<br>அசாநிகள் / சர்வதேச அசாநிகள் (SA) சிவில் சமூகம் (SA) | | X | X | |

| உபகொள்கை விடயம் ஒன்று: திரும்பிவருவோரின் சமூக மீளிணைவு | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| இலக்கு: புலம்பெயர் தொழிலாளர்களின் கண்ணியமானதும் பாதுகாப்பானதுமான திரும்பிவருகையும் மற்றும் அவர்களது குடும்பத்தோடும் சமூகத்தோடும் பாதுகாப்பானதும் அக்கறைகொண்டதுமான வினைத்திறனான மீளிணைவும் | | | | | | | | |
| விளைவு | வெளியீடு | முக்கியமான செயற்பாடுகள் | செயற்பாட்டுச் குறிகாட்டிகள்(2016-2018) | முன்னணி முகவர்கள் (LA) மற்றும் ஆதரவு முகவர்கள் SA) | 2016 | 2017 | 2018 | வரவு செலவுத்திட்டம் |
| தந்திரோபாயம் 4. புலம்பெயர் தொழிலாளர்களுடைய குடும்ப அங்கத்தவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரி அத்துடன் அவர்களின் பிள்ளைகளின் விருத்தியில் விசேட கவனம் செலுத்துதல் | | | | | | | | |
| | | 4.2 திரும்பிவருவோர் குடும்பங்களுடன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைந்து பணியாற்றுவதும் ஆற்றுப்படுத்தல்களுக்கான பிரச்சினைகள் மற்றும் தேவைகளை இனம்காணுதலும்.<br>4.2 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பாதிக்கப்பட்ட சிறுவரகளின் மதிப்பென் அட்டையின் பிரயோகத்தை அறிமுகம் செய்தல். | 4.2 பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான மதிப்பீட்டு அட்டை பரந்த அடிப்படையில். பிரயோகிக்கப்படுகின்றது.<br>4.2 25%மான புலம்பெயர்ந்து மீள்திரும்பியோர் வழிகாட்டுதல்கள் செய்யப்பட்டுள்ளன. | | | | | |
| | 4.3 புலம்பெயர் தொழிலாளர்களின் சிறுவர்களுக்காக மாவட்ட மட்டத்தில் பரந்துபட்ட அடிப்படையில் சேவைகள் கிடைக்கக்கூடியதாக உள்ளது. | 4.3 புலம்பெயர் தொழிலாளர்களின் நலனோம்பலையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கு மாவட்ட மட்டத்தில் எல்லா பங்கீடுபாட்டாளர்களுடனும் ஒரு கூட்டிணைப்புப் பொறிமுறையை நிறுவுதல். | 4.3 வருடத்திற்கு 40%முறையிடப்பட்ட முறைப்பாடுகள் அல்லது பிரச்சினைகள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவால் கையாளப்பட்டுள்ளது. | | | X | X | |

# உபகொள்கை விடயம் ஒன்று: திரும்பிவருவோரின் சமூக மீளிணைவு

இலக்கு: புலம்பெயர் தொழிலாளர்களின் கண்ணியமானதும் பாதுகாப்பானதுமான திரும்பிவருகையும் மற்றும் அவர்களது குடும்பத்தோடும் சமூகத்தோடும் பாதுகாப்பானதும் அக்கறைகொண்டதுமான வினைத்திறனான மீளிணைவும்

| விளைவு | வெளியீடு | முக்கியமான செயற்பாடுகள் | செயற்பாட்டுச் குறிகாட்டிகள்(2016-2018) | முன்னணி முகவர்கள் (LA) மற்றும் ஆதரவு முகவர்கள் SA) | 2016 | 2017 | 2018 | வரவு செலவுத்திட்டம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தந்திரோபாயம் 5. புலம்பெயர் தொழிலாளர் பிள்ளைகளுக்கான திறன் விருத்தி மற்றும் தொழில்துறை ஆலோசனைச் சேவை | | | | | | | | |
| 5. முன்கூட்டியே பாடசாலையை விட்டு இடைவிலகுபவர்களுக்கு உளவள ஆலோசனை வழங்கப்படுவதுடன் அவர்களை தொழில்துறை பயிற்சியில் உள்வாங்குதல். | 5.1 பாடசாலைகளில் பயிற்றப்பட்ட மாணவ உளவள ஆலோசகர்கள் காணப்படுகின்றனர். | 5.1 அழுத்தத்திலும் உதவி தேவையிலும் உள்ள மாணவர்களுக்கு உளவளச்சேவையை அளிப்பதற்காக பாடசாலைகளில் ஒரு மாணவர் ஆலோசனையாளரை நியமிப்பதுடன் அவர்களது இயலுமையையும் கட்டியெழுப்புதல். | 5.1 ஒரு வருடத்திற்கு 1000 எண்ணிக்கையான சிறுவர்கள் உளவளச்சேவையை பெற்றுள்ளனர். | MoFE, SLBFE (LA)<br>தேசிய மற்றும் மாகாண மட்ட கல்வித் திணைக்களம் (LA)<br>மாகாண சபைகள் (SA)<br>மாவட்ட செயலகங்கள் (SA)<br>பிரதேச செயலகங்கள் (SA) | | X | X | |
| | 5.2 புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு கல்வி புலமைப்பரிசில்கள் வழங்குவதற்காக உதவிகளும் செயன்முறைகளும் நிறுவப்பட்டன. | 5.2. புலம்பெயர் தொழிலாளியின் சிறுவர்களுக்கு கல்வி புலமைப்பரிசில்களுக்காக ஒழுங்குமுறைகளை உதவுதல் மற்றும் நிறுவுதல் மற்றும் நிதிசார்ந்த வழங்கல்களை மேற்கொள்ளல். | 5.2 ஒரு வருடத்திற்கு 3000 எண்ணிக்கையான புலமைப்பரிசில்கள் புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்பங்களிலுள்ள தேவையான பிள்ளைகளுக்கு வழங்கப்படுகிறது. | நன்னடத்தை மற்றும் சிறுவர் கவனச்சேவைகள் திணைக்களம் (SA)<br>சமூக சேவைகள் திணைக்களம் (SA)<br>பெண்கள் விவகார அமைச்சு (SA)<br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை (SA) | X | X | X | |
| | 5.3 வேலைவாய்ப்பு வழிகாட்டல் சேவைகள் தொழிற் பயிற்சி நிறுவனங்களுடன் கிடைக்கப்பெறுவதோடு புலம்பெயர் தொழிலாளரின் பிள்ளைகளுக்கு அது கிடைக்கக்கூடியதாக உள்ளது. | 5.3 புலம்பெயர் தொழிலாளரின் குடும்பங்களிலுள்ள முன்கூட்டியே பாடசாலையை விட்டு இடைவிலகியவர்களுக்கு தொழில்பயிற்சியை அண்மையிலுள்ள தொழில்பயிற்சி நிலையங்களில் நிதியுதவி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டிகளுடன் வழங்குதல். | 5.3 ஒரு வருடத்திற்கு 1500 குடும்ப உறுப்பினர்கள் திறன் விருத்தியைப் பெற்றுள்ளனர். | அ.சா.நி.கள் / சர்வதேச அ.சா.நி.கள் (SA)<br>சிவில் சமூகம் (SA) | | X | X | |




# திரும்பிவருவோரின் பொருளாதார மீளிணைவு

உப கொள்கைப் பகுதி 2:

## திரும்பிவருவோரின் பொருளாதார மீளிணைவு

பொருளாதார வலுவூட்டல் என்பது புலம்பெயர் தொழிலாளர்களின் திறன் ஊக்குவிப்பு மீள வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ளுதல், இலங்கை வேலைப்படையுடன் மீள இணைதல் தொடர்புடைய விடயங்களை உள்ளிணைக்கிறது. மேலும் சேமிப்புக்கள், முதலீடுகள், திரும்பிவந்தோர் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கான நீடித்து நிலைக்கக்கூடிய வருமானத்தை ஊக்குவித்தல், அவர்களது வீட்டைக் கட்டிக்கொள்ளுதல் என்பன அவசியமானவை. அதிகம் நுகர்வு செய்வதை அதையரிப்படுத்துவதுடன் நோக்கமுடைய சேமிப்பை தூண்டுவதும் அவசியமானது, அரச தனியார் நிறுவனங்கள், சிவில் சமூக நிறுவனங்கள் மற்றும் வர்த்தக ஒன்றியங்கள் திரும்பிவருவோரின் வினைத்திறனான பொருளாதார மீளிணைவுக்கு ஆதரவளிக்க சேவை வழங்குவதானது இந்த தந்திரோபாயங்களில் உள்ளடக்கப்படுகிறது. திறன் மதிப்பீடு மற்றும் உட்திறன் உயர்த்துகை முன்கற்றலை அங்கீகரித்தல், தரமிடல், சான்றளித்தல் என்பன அவர்களின் மீள வேலைவாய்ப்பு பெறுகைக்கு பெறுமானம் சேர்ப்பதுடன் அவர்களுக்கு உயர் ஊதியத்தையும் பெற்றுத் தருகிறது. அனுப்பும் மற்றும் சென்றுசேரும் நாடுகளுக்கிடையிலான திறன்களின் பரஸ்பர அங்கீகரிப்பு ஒப்பந்தங்களை அறிமுகம் செய்வது புலம்பெயர்வு மீதான பணிச்சட்டகத்தில் சிறப்பித்துக் காட்டப்படுகிறது.

தந்திரோபாயங்கள்:

2.1 விட்டு புறப்படுவதற்கு முன்னரும் திரும்பி வருதலின் பொழுதும் புலம்பெயர் தொழிலாளர்களின் திறன்கள் தர நியமப்படுத்தலும் சான்றுப்படுத்தலும்.

2.2 புலம்பெயர் தொழிலாளர்களிடையே சேமிப்பு, முதலீடு, மற்றும் நிதி முகாமைத்துவம் என்பவற்றை ஊக்குவித்தல்.

2.3 புலம்பெயர் தொழிலாளர்களுக்கு தொழில்முயற்சியாண்மையை ஊக்குவித்தல், கடன் கிடைக்கச் செய்தல், வியாபார விருத்தி மற்றும் சந்தைச் சேவைகளை ஊக்குவித்தல்.

2.4 தனியார் மற்றும் அரச பங்காண்மைகளுக்கூடாக எல்லாத் திறன் வகைப்பாட்டினருக்குமான திரும்பிவருபவர்களுக்கு உள்ளூர் வேலைவாய்ப்புத் திட்டங்களை விருத்தி செய்தல்.

## உபகொள்கை விடயம் இரண்டு: திரும்பிவருவோரின் பொருளாதார மீளிணைவு

இலக்கு: புலம்பெயர் தொழிலாளர்கள் சான்றுப்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தக்கூடிய திறன்களைப் பெற்றுக்கொள்ளல் தொழில்முயற்சியாண்மையை விருத்தி செய்தல் வேலைவாய்ப்பில் ஈடுபடுதல், நீடித்து நிலைக்கக்கூடிய வாழ்வாதாரத்திலும் ஈடுபடுதல் என்பவற்றில் ஆதரவளிக்கப்படுகிறது

| விளைவு | வெளியீடு | முக்கியமான செயற்பாடுகள் | செயற்பாட்டுச் குறிகாட்டிகள | முன்னணி முகவர்கள் (LA)மற்றும் ஆதரவு முகவர்கள்ராலயங்கள் SA) | 2016 | 2017 | 2018 | வரவு செலவுத்திட்டம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தந்திரோபாயம் 1. புலம்பெயர் தொழிலாளர்களின் திரும்பிவருகையின்பொழுது அவர்களின் தர நியமம் மற்றும் திறன் சான்றுப்படுத்தல் | | | | | | | | |
